**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 179/2024**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : மலைச்சாமி | **Caste** | : |
| **Father's Name** | : பிச்சை | **Calling** | : **கூலி** |
| **Village** | : **தெப்பத்துப்பட்டி** | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : **45** |
| | | **Dated** | : **09.03.2026.** |

**09.03.2026.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 திரு. மலைச்சாமி ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.</u>**

1. நான் திண்டுக்கல் தெப்பத்துப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்த அபிஸ்குமார் எனது மகன், சந்தோஷ் அபிஸ்குமாரின் நண்பர். கடந்த 18.05.2023 ம் தேதி காலை 10.00 மணிக்கு எனது மகன் அபிஸ்குமாரும் சந்தோசும் சந்தோஷ் படிக்கும் கல்லூரியில் அவருக்கு ஹால்டிக்கெட் வாங்குவதற்காக

இருசக்கர வாகனத்தில் கிளம்பி திண்டுக்கலுக்கு வந்தனர். இருசக்கர வாகனத்தை சந்தோஷ் ஓட்டி வந்தார். மறுநாள் சந்தோசுடன் படிக்கும் வசந்த் என்பவரின் அப்பா எனக்கு போன்செய்து குட்டியபட்டி பிரிவில் இருசக்கரவாகனத்தில் திண்டுக்கல் நோக்கி வந்து கொண்டிருந்த போது JCB மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். தகவல் கேள்விபட்டு K.T மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். என் மகனுக்கு பின்தலை மற்றும் தோள்பட்டையில் காயம் ஏற்பட்டிருந்தது. சந்தோசிற்கு காயம் ஏற்பட்டு திண்டுக்கல் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். அவரை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாக சொன்னார்கள். நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகாரை குமரேசன் எழுதி படித்து காட்டினார். புகார் அ.த.சா.ஆ.1 ஆகு குறியீடு செய்யப்படுகிறது. எனது மகனை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் 21 ம் தேதி இறந்து விட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். JCB ஓட்டி வந்த நபர் யார் என்று தெரியாது என்றால்சரிதான். விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரனையில் சொல்லியுள்ள சங்கதிகளைத்தான் போலிசார் விசாரனையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து குறித்து எனக்கு போன் மூலம் தான் தகவல் சொன்னார்கள் என்றால் சரிதான்.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.03.09 17:20:33 +0530

Judicial Magistrate No.I

Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 179/2024**

**Prosecution Witness : 2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **விஜய குமார்** | **Caste** | : |
| **Father's Name** | : மாயி | **Calling** | : **கறிக்கடை** |
| **Village** | : **குட்டியபட்டி பிரிவு** | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : **46** |
| | | **Dated** | : **09.03.2026.** |

**09.03.2026.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–4 திரு. விஜயகுமார் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**

1. நான் திண்டுக்கல் குட்டியபட்டி பிரிவில் குடியிருந்து கறிக்கடை வைத்துள்ளேன். தேதி எனக்கு நினைவில்லை சுமார் 3 வருடத்திற்கு முன்பு மதியம் சுமார் 12 மணியிருக்கும் நான் எனது கறிக்கடையில் இருந்த போது சத்தம் கேட்டது. நாங்கள் சென்று பார்த்தோம். JCB கிழக்கிருந்து

மேற்கு நோக்கி வந்தது. இருசக்கரவாகனம் மேற்கிருந்து கிழக்கு நோக்கி வந்தது. இருசக்கர வாகனத்தில் இரண்டு பசங்கள் வந்தார்கள். இருசக்கரவாகனம் மோதிவிட்டது. எப்படி மோதியது என எனக்கு தெரியாது. JCB வாகனத்தை யார் ஓட்டினார் என்று எனக்கு தெரியாது. அவர் பெயர் விலாசம் எனக்கு தெரியாது. வழக்கின் எதிரி யார் என்று எனக்கு தெரியாது அவரை பார்த்தால் எனக்கு அடையாளம் காட்ட தெரியாது. விபத்து சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தேன். காயம் பட்ட நபர்களை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 18.05.2023 ம் தேதி 12 மணிக்கு குட்டிய பட்டி பிரிவில் உள்ள எனது கறிக்கடையில் இருந்த போது செம்பட்டி – திண்டுக்கல் ரோட்டில் குட்டிய பட்டி பிரிவு அருகே கருப்பு டீ–சர்ட் அணிந்த நபர் TN 60 AW 9857 என்ற எண்னுள்ள Yamaga R15 இருசக்கர வாகனத்தை ஓட்டியும் புழு கலர் டி–சர்ட் அணிந்த நபர் பின்னர் அமர்ந்தும் மேற்கிருந்து கிழக்கு நோக்கி வந்த போது அவர்களுக்கு எதிரே TN 57 BQ 4204 என்ற JCB வாகனத்தை ஓட்டிய இவ்வழக்கின் எதிரி அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் செய்கை காட்டாமலும் ரோட்டின் வலது பக்கமாக திரும்பியதால் இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் JCB மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றும் இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் JCB வாகனத்தை ஓட்டிய நபரை நான் சம்பவ இடத்தில் வைத்து பார்த்தேன் என்றும் கூறிவிட்டு தற்போது சத்தம் கேட்டு விபத்து நடந்த இடதிற்கு சென்று பார்த்ததாகவும் எதிரியை தெரியாது என்றும் பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. –

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.03.09 17:20:39 +0530

Judicial Magistrate No.I

Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 179/2024**

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | முருகன் | **Caste** | : | |
| **Father's Name** | : | ஆண்டியப்பன் | **Calling** | : | வொர்க்சாப் |
| **Village** | : | குட்டியபட்டி பிரிவு | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **49** |
| | | | **Dated** | : | **09.03.2026.** |

**09.03.2026.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–5 திரு. முருகன் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

<u>**எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**</u>

1. நான் திண்டுக்கல் குட்டியபட்டி பிரிவில் குடியிருந்து வொர்க்சாப் வைத்துள்ளேன். தேதி எனக்கு நினைவில்லை சுமார் 3 வருடத்திற்கு முன்பு மதியம் நான் எனது வொர்க்சாப்பில் இருந்த போது சத்தம் கேட்டது. நாங்கள் சென்று பார்த்தோம். குட்டிய பட்டி பிரிவில் கூட்டமாக இருந்தது.

JCB கிழக்கிருந்து மேற்கு நோக்கி வந்தது. இருசக்கரவாகனம் மேற்கிருந்து கிழக்கு நோக்கி வந்தது. இருசக்கர வாகனத்தில் இரண்டு பசங்கள் வந்தார்கள். இருசக்கரவாகனம் மோதிவிட்டது. எப்படி மோதியது என எனக்கு தெரியாது. JCB வாகனத்தை யார் ஓட்டினார் என்று எனக்கு தெரியாது. அவர் பெயர் விலாசம் எனக்கு தெரியாது. வழக்கின் எதிரி யார் என்று எனக்கு தெரியாது அவரை பார்த்தால் எனக்கு அடையாளம் காட்ட தெரியாது. காயம் பட்ட நபர்களை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 18.05.2023 ம் தேதி 12 மணிக்கு குட்டிய பட்டி பிரிவில் உள்ள எனது வொர்க்சாப்பில் இருந்த போது செம்பட்டி – திண்டுக்கல் ரோட்டில் குட்டிய பட்டி பிரிவு அருகே கருப்பு டீ–சர்ட் அணிந்த நபர் TN 60 AW 9857 என்ற எண்ணுள்ள Yamaga R15 இருசக்கர வாகனத்தை ஓட்டியும் புழு கலர் டி–சர்ட் அணிந்த நபர் பின்னர் அமர்ந்தும் மேற்கிருந்து கிழக்கு நோக்கி வந்த போது அவர்களுக்கு எதிரே TN 57 BQ 4204 என்ற JCB வாகனத்தை ஓட்டிய இவ்வழக்கின் எதிரி அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் செய்கை காட்டாமலும் ரோட்டின் வலது பக்கமாக திரும்பியதால் இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் JCB மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றும் இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் JCB வாகனத்தை ஓட்டிய நபரை நான் சம்பவ இடத்தில் வைத்து பார்த்தேன் என்றும் கூறிவிட்டு தற்போது சத்தம் கேட்டு விபத்து நடந்த இடதிற்கு சென்று பார்த்ததாகவும் எதிரியை தெரியாது என்றும் பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. –

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.03.09 17:20:45 +0530

Judicial Magistrate No.I

Dindigul.